மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி நிர்வாகத்துக்கும், நெடுஞ்சாலைத் துறை நிர்வாகத்துக்கும் இடையே தகராறு என்பதே இல்லை. மாநகராட்சியிடமிருந்து இந்த சாலைகள் நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது, நெடுஞ்சாலைகள் எல்லாம் செம்மையான முறையில் போடப்பட்டு விபத்துக்கள் நிகழாதவண்ணம் இருக்க வேண்டும் என்றும், நீண்டநாள் இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் செம்மையான முறையில் செயல்படுவதற்காகத்தான் நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : மாநகராட்சி நிர்வாகத்துக்கு உட்பட்ட மின் தொடர்புகள்—அதாவது காலையில் கரண்ட் கட் செய்யப்படுகிறது; அப்படிப்பட்ட நேரத்தில், மாநகராட்சி நிர்வாகத்தினர் மின்சார சம்பந்தமான வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில், ஏற்படுகின்ற பல்வேறு தொல்லைகளின் காரணமாக—ஒருவருக்கொருவர் தகராறு ஏற்பட்டு, மாநகராட்சிக்குச் சொந்தமான மெட்டீரியல்களை எல்லாம் நெடுஞ்சாலைத் துறையினர் சீஸ் பண்ணிக்கொண்டு, எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள். இப்படி தகராறுகள் ஏற்படுவதினால், ஒரே நிர்வாகத்தின் கீழ் இந்தச் சாலைகள் மாற்றப்படுமா என்று கேட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நிரந்தர பலனைப் பெற முயலும்போது, ஆரம்பத்தில் ஏற்படுகின்ற சில சிக்கல்களை பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

கால்நடை உதவியாளர்கள்.

*524 வினு—திரு. தாழை மு. கருணாநிதி, திரு. வி. கே. **கோதண்டராமன்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெருக்கடி நிலை அமுலில் உள்ள நோக்கில், கால்நடை பாராமரிப்புத் துறையில் 264 கால்நடை உதவியாளர் நிலை II களுக்கு கால்நடை உதவியாளர் நிலை I பதவி உயர்வு அளிக்கப்பட்டு, ரத்து செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் பதவி உயர்வு எப்போது அளிக்கப்படும் ?

1978 மார்ச் 11]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) மற்றும் (ஆ) எல்லா கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களையும் கால்நடைப் பராமரிப்புத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரவும், மற்றும் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு கால்நடை ஆய்வாளர் நிலை I -ஐ நியமிக்க வேண்டுமெனவும் அரசு எடுத்த முடிவுக்கிணங்க 314 கால்நடை ஆய்வாளர் (நிலை I) கள் கால்நடை மருந்தகங்களிலிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டனர்.

கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் 264 கால்நடை ஆய்வாளர் (நிலை II) களுக்கு, கால்நடை ஆய்வாளர் (நிலை I) களாக பதவி உயர்வு அளித்தார். ஆயினும் பின்னர் இது ரத்து செய்யப்பட்டது. அரசு இதுகுறித்து முழுமையாக மறுஆய்வு செய்து 314 கால்நடை ஆய்வாளர் (நிலை II) களை, கால்நடை ஆய்வாளர் (நிலை I) களாக பதவி உயர்வு செய்து மருந்தகங்களில் காலியகாவுள்ள பதவிகளுக்கு நியமனம் செய்ய முடிவு செய்துள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், எதற்காக வேண்டி அவர்களுக்கு முன்னே கிரேடு 2-லிருந்து கிரேடு 1 பதவி உயர்வு அளிக்கப்பட்டது? என்ன காரணத்திற்காக வேண்டி மீண்டும் கிரேடு 1-லிருந்து கிரேடு 2-க்கு தாழ்த்தப்பட்டது? ஆகவே, மீண்டும் அவர்களை பழையபடி கிரேடு 1-க்கு உடனடியாக மாறுவதற்கான உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறை சம்பந்தமான மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது 7 ஆம் தேதியன்று இந்த 314 நிலை 2-லிருந்தவர்களுக்கு நிலை 1-க்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியங்களிலே இருந்த ஆய்வாளர்கள் கால்நடைத் துறைக்கு இணைக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒன்றியங்களோடு அவர்கள் இணைந்திருந்தபோது அவர்கள் நல்ல முறையிலே கிராமங்களிலே செயல்பட்டு வந்தார்கள். ஆகவே,

மறுபடியும் ஆணையாளர்கள் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகங்கள் ஒவ்வொரு யூனியனுக்கும் இப்போது இருக்கின்ற ஸ்டெரெங்த்தை விட அதிகமாக்க, மேலும் அங்கே கால்நடை மருந்தகங்கள் ஏற்படுவதற்கு இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, இதுபற்றி பரிசீலித்து ஆய்ந்து அரசு முடிவெடுக்கும்.

Burma Repatriates settled in Tiruchirappalli.

* 325 *Q.*—THIRU C. MANICKAM, THIRU S. M. VASAN: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) whether the Burma repatriates at Tiruchirappalli have sought lands in Thiruchirappalli to carry on their avocations;

(*b*) whether a place in the Municipal area has exclusively been allotted to them; and

(*c*) if so, the steps taken to build shops thereon?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) ஆம்.

(ஆ) ஆம். யானைக்குளம், சிங்காரத்தோப்பு பகுதியில் 33,000 சதுர அடி ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருச்சியில் ஏற்கனவே இருக்கிற அங்காடி அமைந்திருக்கின்ற இடம் வளர்ந்து வருகின்ற பெருநகருக்குப் போதுமான இடமில்லை என்பதால், ஏற்கனவே அங்குள்ள வெல்ல மண்டிகள் இடமாற்றம் செய்ய வேண்டிய சூழ்நிலையில் உள்ளன. அப்படிப்பட்ட சூழ்நிலையில், அகதிகளுக்கு அமைக்கப்படுகின்ற இடத்தை வேறொரு புதிய இடத்தில், இந்த இடத்திலே சந்தைகள்